கவனிக்க.– 14.11.2025 ஆந் திகதிய 2463 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2464 - 2025 නොවැම්බර් මස 21 වැනි සිකුරාදා - 2025.11.21

2464 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | 536 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | 538 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2025, திசெம்பர் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2025, நவெம்பர் மாதம் 28 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

535 - B 82739 - 403 (2025/11)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள்

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 19 (4) இன் கீழ் வழங்கப்பட்ட அளிப்புகளை பிரிவு 104 இன் கீழ் ரத்து செய்தல்**

அதி உத்தம சனாதிபதி அவர்களினால், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) ஆம் உப பிரிவுக்கேற்ப 1997 ஆம் ஆண்டு 08 ஆம் மாதம் 28 ஆம் திகதி உக்குளாங்குளம், வவுனியா இல் வசிக்கும் சுப்பன் முத்துக்குமாரு என்பவருக்கு வவு/வவு/பிரா/2094 ஆம் இலக்க அளிப்பின் கீழ் பாரதீனம் செய்யப்பட்டு வவுனியா மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் 18.06.1998 ஆந் திகதி LDO 16/313 ஆம் பதிவேட்டின் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள, கீழ்க்காணும் அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டுள்ள காணியை சட்டரீதியான பின்னுரிமை வாரிசு இல்லை என அறிக்கை செய்யப்பட்டுள்ளதால்/ வட மாகாண சபைக்குட்பட்ட வவுனியா பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் இந்திரராசா பிரதாபன் ஆகிய நான், இத்தால் அறியத்தருகிறேன். ஆதலால் கட்டளைச் சட்டத்தின், 104 ஆம் பிரிவின் கீழ், மேற்கூறிய அளிப்பை இரத்து செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்நடவடிக்கைக்கு ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் 19.12.2025 க்கு முன்னர் எழுத்திலான ஆவணம் மூலம் எனக்குத் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

நில அளவை நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட F. T. P. - 07 ஆம் இலக்க வெளிக் களத்தாளின் பிரகாரம் நில அளவைத்தலைமை அதிபதி அவர்களினால் தயாரிக்கப்பட்ட 176 இலக்கத் துண்டுகள் வேறாக்கப்பட்ட வரைபடத்திலிருந்து உத்தரவு பெற்ற நில அளவையாளரான எஸ். துரைசிங்கம் என்பவரினால் நிர்மாணிக்கப்பட்ட 1837 இலக்க பிரதிப்படத்தில் காணித்துண்டு இலக்கம் 01 எனக் காட்டப்பட்டுள்ளதும், வவுனியா நிருவாக மாவட்டத்திற்குட்பட்ட வவுனியா பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த - பற்று/ கோரளையிலுள்ள பண்டாரிகுளம் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த உக்குளாங்குளம் எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் உக்குளாங்குளம் என அழைக்கப்படுவதுமான ஹெக்டயார் 0.0506 விஸ்தீரணமுள்ளதுமான அரச காணி.

இதன் எல்லைகள் வருமாறு: -
வடக்கு : திருச்செந்தூர் மில்;
கிழக்கு : குகனின் ஆதனம்;
தெற்கு : றோட்;
மேற்கு : திருச்செந்தூர் மில்.

ஐ. பிரதாபன்,
பிரதேச செயலாளர்,
வவுனியா.

2025, யூலை 09

11 - 304

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப் பத்திரத்தை பதிவழித்து நீக்குதல் செய்தல் (104) ஆம் பிரிவு தொடர்பாக அறிவித்தல்**

தென் மாகாண சபையின், மத்தறை மாவட்டத்தில் அமைந்துள்ள முலட்டியான பிரதேச செயலாளர் பிரிவில் பிரதேச செயலாளர்/ மேலதிக காணி ஆணையாளர் (உள் மாகாண) விந்தியா டி. சமரக்கொடி ஆகிய நான் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின்

19 (4) ஆம் உட்பிரிவின் கீழ் அதி உத்தம ஜனாதிபதி அவர்களினால் 1982.03.08 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மாத்தறை/பிர/460 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் கீழ் உரிமையாளரான கெடியபே எனும் முகவரியில் வசிக்கும் கமாக்சிகே எடி என்பவருக்கு கையளிக்கப்பட்டு மாத்தறை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் LDO 1065 ஆம் இலக்கத்தின் கீழ் 1982.04.29 அம் திகதி பதிவு செய்ய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பின்னுரிமையாளராவதற்குச் சட்டரீதியான உரிமையாளர் இல்லாத காரணத்தால் அல்லது உரிமையானவர் இருந்தும் அவர் பின்னுரிமையாளராக இருக்க விரும்பாத காரணத்தால் பின்னுரித்துக்கு ஒருவரும் நியமிக்கப்பட்வில்லை என அறிக்கையிடப்பட்டுள்ளது. ஆதலால் குறித்த அளிப்புப் பத்திரத்தை மேற் கூறிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் பதிவழித்து நீக்குதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. என இத்தால் அறியத்தருகின்றேன். இது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால் அவற்றை 2025.12.12 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**அட்டவணை**

தென் மாகாணத்தின் மாத்தறை நிருவாக மாவட்டத்தின் முலட்டியன பிரதேச செயலாளர் பிரிவின் கந்தபட பத்துவ கெட்டியபே வடக்கு எனும் கிராம உத்தியோகத்தர் பிரிவின் கெட்டியபே எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் நில அளவை அதிபர் என்பவரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளதும் நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட ஆரம்ப கிராமம்பட இலக்கம் 132 இல் காணித்துண்டு இலக்கம் 316 என குறிப்பிடப்பட்டுள்ள காணியின் விஸ்தீரணம் சுமார் 01ஏ. 01 றூட். 12 பேர்ச் என கணக்கிடப்பட்ட கெட்டியபெ முகலான என காட்டப்பட்டுள்ள பின்வரும் எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணித்துண்டு.

வடக்கு : ஆ. கி. ப. 132 இல் இலக்கம் 315, 314 காணித் துண்டுகள்;
கிழக்கு : ஆ. கி. ப. 132 இல் இலக்கம் 311 காணித் துண்டு;
தெற்கு : ஆ. கி. ப. 132 இல் இலக்கம் 311, 321 காணித் துண்டுகள்;
மேற்கு : ஆ. கி. ப. 132 இல் இலக்கம் 321 காணித் துண்டு.

வித்தியா டீ. சமரக்கொடி,
பிரதேச செயலாளர்,
முலட்டியான.

2024, பெப்புருவரி 28.

11 - 317/1

---

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

இணைப்பு 09

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் உறுப்புரையின் (4) ஆம் துணை உறுப்புரையின் கீழ் வெளியிடப்பட்ட வழங்கல் பத்திரத்தை இரத்துச் செய்தல் (104 ஆம் உறுப்புரை) அதற்கான அறிவித்தல்**

தென் மாகாணத்தின், மத்தறை மாவட்டத்தின், மாத்தறை பிரதேச செயலகப் பிரிவின் பிரதேச செயலாளர் சுசந்த அத்தனாயக்க ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 (4) துணை உறுப்புரையின் கீழ் அதி மேதகு ஜனாதிபதியினால் 1982 மார்ச் 10 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மாத்தறை/பிர/2356 ஆம் இலக்க வழங்கல் பத்திரத்தின் உரிமையாளரான கெகணதுர மற்றும் தல்பாவில வடக்கை வசிப்பிடமாகக் கொண்ட தலந்தாவத்கே பிங்சொஹாமி அவர்களுக்கு வழங்கப்பட்டு மாத்தறை மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் LDO 1043 ஆம் இலக்கம் மற்றும் 1982 ஏப்ரல் 29 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டு பின்னர் முதல் உரிமையாளராக ஹன்னாகல கமகே எலிஸ் நோனா என்பவருக்கு கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள காணிக்கு பின் தொடரும் ஒருவர் ஆகுவதற்காக சட்டரீதியாக உரிமையாளர் ஒருவர் இல்லாமல் போவதால் அல்லது உரிமை உள்ள ஒருவர் இருந்த போதிலும் அவ ன்/ அவள் பின்தொடரும் ஒருவவராகுவதற்கு விருப்பம் இல்லாமல் போகும் போது பின்தொடர்வதற்கு ஒருவர் இல்லையென்பது அறிய வந்துள்ளதால் குறிப்பிடப்பட்ட வழங்கல் பத்திரத்தை குறித்த சட்டத்தின் 104 ஆம் உறுப்புரையின் கீழ் ரத்துச் செய்வதற்கு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறேன் என்பதை இதன் மூலம் அறிவித்துக் கொள்கிறேன். இது தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புக்கள் இருப்பின் அதனை 2025.12.12 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு எழுத்து மூலம் அறியத் தருதல் வேண்டும்.

**அட்டவணை**

தென் மாகாணத்தின் மாத்தறை நிருவாக மாவட்டத்தின் வெல்லபட பத்துவ மேற்கு மற்றும் கடவத்சத்தர பிரதேச வருமான அலுவலர் பிரிவின் வெல்லபட பத்துவை நாகுட்டிய கிராம அலுவலர் பிரிவின் கெகணதுர மற்றும் தல்பாவில வடக்கு என்னும் கிராமத்தில் அமைந்துள்ளதுமான சர்வியர் நாயகத்தினால் தொகுக்கப்பட்டு அவர் பொறுப்பில் உள்ள ஆம் இலக்க களப் பத்திரத்தில் மு. பி. மாறை 257 ஆம் இலக்க நில அளவைப் படத்தில் 722 ஆம் இலக்க காணித் துண்டாகக் காட்டப்பட்டுள்ளதுமான, 38 பேர்ச் அளவு பிரமாண்டமுடையது என கணக்கிடப்பட்டுள்ளதுமான நாகுட்டியவத்த என அடையாளப்படுத்தப்பட்ட கீழ் காட்டப்பட்டுள்ளவாறு எல்லைப்படுத்தப்பட்டுள்ள அரசாங்க காணித் துண்டு :-

வடக்கு : மு. பி. மாறை 257 இல் 525 ஆம் இலக்க மற்றும் 719, 718 துண்டுகள்;
கிழக்கு : மு. பி. மாறை 257 இல் 723 ஆம் இலக்க துண்டு;
தெற்கு : மு. பி. மாறை 257 இல் 525 ஆம் இலக்க துண்டு;
மேற்கு : மு. பி. மாறை 257 இல் 525 ஆம் இலக்க துண்டு.

சுசந்த அத்தனாயக்க,
பிரதேச செயலாளர்,
மாத்தறை.

2025, பெப்புருவரி 13.

11 - 317/2

# நானாவித காணி அறிவித்தல்கள்

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்: 4/10/77258.
மாகாணக் காணி ஆணையாளரின் இலக்கம்: EP/28/LB/L-10/LS/TRI/MOR/21.

**21(2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்**

திருகோணமலை மாவட்டத்தின் மொரவெவ பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம் 230C, நொச்சிகுளம் கிராம அலுவலர் பிரிவின் மயிலகுடாவெவ கிராமத்தில் அதிகாரம் பெற்ற நில அளவையாளரால் தயாரிக்கப்பட்ட 0398 நில வரைபடத்தின் துண்டு இல. A இனால் காண்பிக்கப்பட்டுள்ள 02 ஏக்கர் பரப்பளவு கொண்ட அரசாங்க காணித் துண்டை விவசாய நோக்கத்திற்காக திருமதி ஜினதாசகே அனுபமா என்வரின் பெயரில் குத்தகைக்கு கோரியுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

வடக்கு: வீதி (RDA);
கிழக்கு: அரசாங்கக் காணி;
தெற்கு: டப்ளியூ. ஆர். தீபிக்கா என்பவரின் காணி;
மேற்கு: பாதை.

03. கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் கீழ் குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கம் கருதியுள்ளது.

(அ) குத்தகைக் காலம் : முப்பது (30) வருடங்கள் (2025.09.26 முதல் 2055.09.25 வரை)

**வருடாந்த குத்தகைத் தொகை** : 2025 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூ. 5,000,000.00) குறைவாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டில் காணிக்கான மேம்படுத்தப்படாத பெறுமதியின் 2% ஆகும். 2025 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபா அல்லது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூ. 5,000,000.00) அதிகமாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீ ட்டின் அடிப்படையில் அந்த ஆண்டில் காணிக்கான மேம்படுத்தப்படாத பெறுமதியின் 4% ஆகும். இந்த குத்தகைத் தொகை சகல 05 வருடங்களுக்கொருமுறை திருத்தப்பட வேண்டுமென்பதோடு அது முன்னைய 05 வருடங்களின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகை தொகைக்கு 20% சேர்க்கப்படல் வேண்டும்.

**தவணைத் தொகை** : தவணைத் தொகை அறவிடப்பட மாட்டாது;

(அ) குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர்கள் குத்தகை ஆரம்பித்து ஒரு (01) வருட காலத்தற்குள் பிரதேச

செயலாளர் திருப்தியடையும் வகையில் இந்தக் காணியை அபிவிருத்தி செய்தல் வேண்டும்;

(இ) குத்தகைக்குப் பெற்றுக்கொள்பவர் இந்தக் காணியை விவசாய நடவடிக்கைகள் தவிர வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக்கொள்ளக் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் விதிக்கப்பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை உட்படுதல் வேண்டும்;

(உ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகைதாரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப் பகுதியினுள் நிறைவேற்றிக்கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்;

(ஊ) 2025.09.26 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் கழியும் வரை உப குத்தகை அல்லது உரிமை மாற்றத்திற்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(எ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு, குத்தகையைச் செலுத்துவதற்கு தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும்.

வர்த்தமானியில் அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைக்கிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

துசித்த கலப்பத்தி,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகம் சார்பாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
காணிச் செயலகம், இலக்கம் 1200/6,
"மிஹிகத மெதுர",
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2025, நவெம்பர் 01.

11 - 229

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது